# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 362 / 2023 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 4 |

| | | |
|---|---|---|
| Name | : | கௌசின் |
| Father's Name | : | செல்லதுரை |
| Village | : | எளம்பலூர் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | தனியார் நிறுவனம் |
| Religion | : | இந்து |
| Age | : | 28 |
| ACCUSED | | **அசீம்கான் - ஆஜர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.10.2024.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது எளம்பலூரில் குடியிருந்து MRF தனியார் நிறுவனத்தில் கான்டிராக்டில் பணிபுரிந்து வருகின்றேன். வழக்கு விபத்தில் இறந்து போன ராம்பிரவேஷ்குமாரை தெரியும். ஆஜர் எதிரி அசீம்கானை தெரியும். கடந்த 2022-ம் வருடம் அக்டோபர் மாதம் தேதி ஞாபகம் இல்லை, அன்றைய தினம் காலை சுமார் 11.00 மணியளவில் ராம்பிரவேஷ்குமார் மெட்டிரியல்சை சிப்ட் செய்வதற்காக T C R பிளான்டிற்கு சென்றார். நான் வேறு இடத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். ராம்பிரவேஷ்குமாருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது ராம்பிரவேஷ்குமாரை ஆம்புலன்சில் ஏற்றிவிட்டார்கள். காயம்பட்ட நபர் என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்றும், எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்றும் எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக எங்கள் மேனேஜர் பாஸ்கர் புகார் அளித்தார். போலீசார் என்னை விபத்து சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

**( சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஆஜர் எதிரி நான் பணிபுரியும் MRF கம்பெனியில் க்ரைன் ஆப்பரேட்டராக பணிபுரிந்தார். நாங்கள் இருவரும் ஒரே கம்பெனியில் பணிபுரிவதால் இருவருக்கும் பழக்கம் உண்டு. போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 08.10.2022–அன்று காலை சுமார் 10.30 மணியளவில் வழக்கு விபத்தில் இறந்து போன ராம்பிரவேஷ்குமார் T C R பிளான்டிற்கு அருகே பணியில் இருந்த போது ஆஜர் எதிரி TN 46 A B 2830 என்ற க்ரைனை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து ராம்பிரவேஷ்குமார் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டார் என்றும், அந்த சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்றும், காயம்பட்ட நபர் இறந்து விட்ட காரணத்தினாலும், எதிரி எனக்கு பழக்கமானவர் என்பதினாலும், எதிரி கேட்டுக்கொண்டதன் பேரில் அவரை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

பாஸ்கர் சம்பவத்தன்று நான் பணிபுரிந்த ப்ளான்டில் என்னுடன் இருந்தார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கேள்விபட்டு அரைமணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு நான் வந்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு வந்த அரை மணிநேரத்தில் அ.சா.1 பாஸ்கர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு வந்த பிறகு அங்கிருந்தவர்கள் என்னிடமும், அ.சா.1 பாஸ்கரிடமும் நடந்த சம்பவம் குறித்து சொன்னார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த ப்ளான்ட் முழுவதும் சி சி டி வி கேமிரா பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**